# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 14.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# இலங்கையின் செயற்பாடுகள் குறித்து ஆணையாளர் கடும் அதிருப்தி




## இலங்கையை தொடர்ந்தும் அவதானிக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள்

மனித உரிமைகள் தொடர்பாக போதுமான முன்னேற்றத்தை இலங்கை உறுதி செய்ய தவறியமை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் மற்றும் இராணுவமயமாக்கல் குறித்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடும் அதிருப்தி வெளியிட்டார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

முதலாவது தினத்திலேயே மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பட்ச்லெட் இலங்கை தொடர்பான அறிக்கையை முன்வைத்துள்ளார்.

அதில் மேலும்,

02 ஆம் பக்கத்தில்...

## பிரதமர் மகிந்தவுக்கு எதிராக இத்தாலியில் ஆர்ப்பாட்டம்




இத்ததாலி சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அந்நாட்டின் போலோக்னா நகரத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி இலங்கையர்கள் கறுப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இத்தாலிக்கு மேலதிகமாக, பிரான்ஸ், ஜேர்மனி மக்கள் உட்பட அந்த இடத்திற்கு சென்றுள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

## பதவியை துறந்தார் கப்ரால்



இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்துள்ளார்.

நாடாளுமன்ற பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை நேற்று திங்

02 ஆம் பக்கத்தில்...

## ஆணையாளரின் அறிக்கையை வரவேற்றுள்ள கூட்டமைப்பு



(ராஜ்)

ஜெனிவாவில் வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை சம்பந்தமான வாய்மூல முன்னேற்ற அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

02 ஆம் பக்கத்தில்...

## ஆளுநராக நியமிக்கப்பட்டார் கப்ரால்



முன்னாள் நிதி இராஜாங்க அமச்சர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அவருக்கு இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டி. லக்ஷ்மன் நாளையுடன் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அஜித் நிவாட் கப்ரால், முன்னதாக 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 9 வருடங்கள் மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## பிள்ளையாரின் இடத்தில் அமர்ந்த அந்தோனியார் பரப்புக்கடந்தான் வீதியில் விஷமிகள் கைவரிசை




(நமது நிருபர்)

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிள்ளையார் சிலை ஒரே இரவில் சிதைக்கப்பட்டு அப்பகுதியில் அந்தோனியார் சிலை வைக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திஇருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை குறித்த பகுதிக்குச்

02 ஆம் பக்கத்தில்...

## கைவிடப்பட்ட நிலையில் கோரோனா தொற்றுக்குள்ளான 11 மாத கை குழந்தைக்கு காது குத்தும் விழா!





(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

பிறந்து ஆறு நாட்களில் கைவிடப்பட்ட குழந்தை திருகோணமலை சிறுவர் இல்லமொன்றில் வளர்க்கப்பட்டு வந்த நிலையில்,அக் குழந்தைக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...






## மட்டக்களப்பில் போலிஸார் திடீர் சுற்றிவளைப்பு

### அன்டிஜன் பரிசோதனையில் 17 பேருக்கு தொற்று உறுதி

(மட்டுநிருபர்)

இந்த சுற்றிவளைப்பின் மூலம் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 1% பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பார் வீதியில் பொலிஸார் மேற்கொண்ட பாரிய அதிரடி நடவடிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் தாக்குதல்: மௌலவிகள் உள்ளிட்ட 25 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கை ஒக்டோபர் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மூவரடங்கிய விசேட நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## கல்முனையில் குறையும் கொரோனா தொற்று

(நமது நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றியபின் நாளாந்த கொரோனா தொற்றாளர் தொகை குறைந்து வருவதாக பிராந்திய

02 ஆம் பக்கத்தில்...




## பிரதமர் மகிந்தவுக்கு எதிராக இத்தாலியில்

தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்காலத்தில் வத்திக்கானுக்கு செல்ல தயாராக இருப்பதாக இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். இங்கு கூடியிருக்கும் மக்கள் இன, மத, பேதம் பாராமல் கூடியுள்ளனர். அவர்களுக்கான நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என பிரான்ஸில் இருந்து வந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் கோரும் நீதி நியாயம் இன்னமும் கிடைக்கவில்லை. உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறவில்லை. சட்டவிரோத செயல்கள் மாத்திரமே இலங்கையில் இடம்பெறுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற ஒரு சம்பவம் மீண்டும் இலங்கையில் இடம்பெற்றுவிடக்கூடாது. மத ரீதியான எவ்வித எதிர்ப்பும் வெளியிடவில்லை. நாங்கள் அந்த மக்களுக்காக நியாயமான விசாரணை ஒன்றை விரைவாக மேற்கொண்டு நீதி வழங்க வேண்டும் என்றே கோரிக்கை விடுகின்றோம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளுநராக நியமிக்கப்பட்டார் கப்ரால்

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'மத்திய வங்கியின் ஆளுநர்' பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அஜித் நிவாட் கப்ரால் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

## ஈஸ்டர் தாக்குதல்: மௌலவிகள் உள்ளிட்ட

குறித்த தினத்தில் இந்த தாக்குதல் குறித்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட மௌலவிகள் உள்ளிட்ட 25 பேருக்கு அழைப்பாணை விடுக்கவும் நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

270 பேர் கொல்லப்பட்ட மற்றும் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்த ஈஸ்டர் தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக குறித்த 25 பேருக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் கொலை, பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவையும் உள்ளடங்குகின்றன.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கை விசாரிக்க செப்டம்பர் முதலாம் திகதி விசேட நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் பொலிஸார் திடீர்

பலருக்கு தொற்று உறுதிசெய்யபட்டுளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி வீதிகளில் சுற்றித்திரிந்த 99 பேருக்கு மேற்கொண்ட கொரோனா பரிசோதனையில் 17 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. வீணாக மக்கள் வெளியில் சென்று தொற்றை அதிகரிக்க காரணமாக இருக்கின்ற காரணத்தினால் குறித்த அதிரடி நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கைவிடப்பட்ட நிலையில் கொரோனா

நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அக்குழந்தை கடந்த ஒன்பது நாட்களாக கந்தளாய் கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளது..

இந்நிலையில்,நேற்று 13ம் திகதி அக்குழந்தைக்கு சரியாக பதினோரு மாதம் என வைத்தியசாலை அனுமதி அட்டையில் பதிவிடப்பட்டுள்ளது.

இக் குழந்தையின் நலனில் அக்கறை கொண்ட கந்தளாய் கொரோனா வைத்தியசாலை ஏழாம் வாட்டுக்கு பொறுப்பான தாதியர்கள் 8 பேர் ஒன்றிணைந்து கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 11 மாத குழந்தைக்கு காது குத்தும் விழாவை மிகவும் குதூகலமாக கொண்டாடியதாக தெரியவந்துள்ளது.

தாதிய உத்தியோகத்தர்களின் இச்செயற்பாட்டை கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர்களும் பார்த்து மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதவியை துறந்தார் கப்ரால்

கட்கிழமை காலை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கப்ரால் கையளித்தார்.

இந்நிலையில் அஜித் நிவர்ட் கப்ரால் இராஜினாமா செய்ததை அடுத்து வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஜயந்த கெட்டகொடவை நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளது.

## ஆணையாளரின் அறிக்கையை

'விசேடமாக இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையோடு இணங்கிச் செயற்படும் என்று ஜனாதிபதி கொடுத்த உத்தரவாதத்தைச் செயலில் காண வேண்டும் என்று ஆணையாளர் வலியுறுத்தியுள்ளதை நாம் அவதானித்துள்ளோம்.

இலங்கையில் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தையும், வேறு சட்ட ஆட்சிக்கு முரணான விடயங்களையும் ஆணையாளர் சுட்டிக்காட்டியதையும் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சம்பந்தமான திடமான நிலைப்பாட்டுக்காக ஆணையாளருக்கு நன்றி செலுத்துகின்றோம். அதேபோல், சாட்சியங்களைச் சேகரித்தல் மற்றும் பாதுகாத்தலுக்கான பொறிமுறை ஏற்படுத்துவது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் விரைவில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கின்றோம்' என்றார்.






ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலிய தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று 22லட்சருபா பெறுமதியான உயிர்காக்கும் கருவி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வி.ரி.சகாதேவராஜா

## கல்முனையில் குறையும் கொரோனா தொற்று

சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் .ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளை இன்னும் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வந்தால் இந்த பிராந்தியத்தில் முற்றாக கொரோனாவை துரத்த முடியுமெனவும் குறிப்பிட்டார்.

என்னோடு கடமையாற்றும் 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பொதுச் சுசுகாதார பரிசோதகர்கள் படையினர் பொலிசார் கள உத்தியோகத்தர்கள் கொதிக்கும் வெயிலில் நின்று சேவையாற்றுவதும் கோரோனா குறைந்து வருவதற்கான காரணமாகுமெனவும் தெரிவித்தார்.

கடந்த இருபத்துநான்கு மணித்தியாலயத்தில் 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 24 பேரே தொற்றுக்குள்ளாகியுள்ளதாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## பிள்ளையாரின் இடத்தில் அமர்ந்த அந்தோனியார் பரப்புக்கடந்தான்

சென்ற மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் குறித்த சம்பவத்தை நேரடியாக அவதானித்ததுடன், குறித்த பகுதியில் வைக்கப்பட்ட அந்தோனியார் சிலையை அகற்றி மடு பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

மடு பரப்புக்கடந்தான் வீதியில் மடு தேவாலயத்தில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த பிள்ளையார் சிலை ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாயமாகியுள்ளது டன், அதே தினத்தில் இந்த இடத்தில் அந்தோனியார் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அப்பகுதியில் மரத்தின் கீழ் இந்த பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது.

அப்பகுதி காட்டுப்பகுதி என்பதால் மதங்கள் கடந்து அப்பகுதியால் செல்பவர்கள் அப்பகுதியில் இருந்த பிள்ளையார் சிலையை வணங்கி விட்டு செல்வது வழக்கம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் சிறிய கோயில் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த நிலையில் முதல் கட்டமாக மூலஸ்தானம் அமைக்கப்பட்டு அதற்கு தற்காலிகமாக பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்த, நிலையில் இந்த பகுதியில் உள்ள பிள்ளையார் சிலையை சில விசமிகள் அகற்றிவிட்டு அந்தோனியார் சிலை வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்துக்கள் மற்றும் இந்துக் குருக்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்தனர். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல்,மடு பொலிஸார் மற்றும் மடு பிரதேச செயலாளர் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை காலை இந்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, புதிதாக வைக்கப்பட்ட அந்தோனியார் சிலை அகற்றப்பட்டு மடு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

மேலும் அவ்விடத்தில் இருந்த பிள்ளையார் சிலையை மீண்டும் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இந்த சம்பவம் தொடர்பாக மடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## இலங்கையின் செயற்பாடுகள் குறித்து ஆணையாளர் கடும்

இலங்கை மற்றும் அதன் போக்குகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான எனது இறுதி அறிக்கையை மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கை அரசாங்கம் அனுப்பிய உள்ளீடுகளை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஜூன் மாத ஜனாதிபதியின் அறிக்கை குறித்து நான் அவதானம் செலுத்தியுள்ளேன்.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் உறுதியாக உள்ளதோடு, தேவையான நிறுவனசார் சீர்திருத்தங்களை செயற்படுத்தவும் தயார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

2021 ஜனவரியில் நியமிக்கப்பட்ட தேசிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளை விரைவாகவும் பகிரங்கமாகவும் வெளியிடுவதை நான் ஊக்குவிக்கிறேன், இது இந்த வருட இறுதிக்குள் அதன் ஆணையை நிறைவு செய்யும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அதன் பின்ன பரிந்துரைகளை மதிப்பீடு செய்ய முடியும். இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் நிர்வாக சவால்கள், அடிப்படை உரிமைகள், ஜனநாயக நிறுவனங்கள், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் இராணுவமயமாக்கல் மற்றும் பொறுப்புக்கூறல் இன்மை தொடர்ந்து நீடிக்கிறது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் ஆகஸ்ட் 30ஆம் திகதி இலங்கைவில் புதிய அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

அவசரகால விதிமுறைகள் மிகவும் பரந்தவை மற்றும் பொது மக்கள் செயற்பாடுகளில் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் மற்றும் இராணுவமயமாக்கல் குறித்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடும் அதிருப்தி வெளியிட்டார்.

அவர்களின் செயற்பாட்டை அலுவலகம் உன்னிப்பாகக் கண்காணிக்கும். சில சிவில் சமூகத் தலைவர்களுடனான ஜனாதிபதியின் அண்மைய சந்திப்பை நான் ஆர்வத்துடன் அவதானிக்கின்றேன்.

மேலும் இலங்கைவில் சிவில் சமூகத்துடனான பரந்த உரையாடல் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறேன். துரதிஷ்டவசமாக, மனித உரிமை பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் நீதித்துறை துன்புறுத்தல் ஆகியவை தொடர்வது மாத்திரமல்லாமல், அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் மாணவர்கள், கல்வியாளர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள்.

அமைதியான பல போராட்டங்கள் மற்றும் நினைவுகூரல்களை முன்னெடுத்தவர்கள் அதியுச்ச அதிகாரத்தை பயன்படுத்தி கைது செய்யப்பட்டனர் அல்லது கட்டாயமாக தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிவில் சமூகக் குழுக்கள் தொடர்பில் புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன, மேலும் அவை அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கும் என்று பரவலாக அஞ்சப்படுகிறது.

விரிவான சாத்தியமான விவாதத்தை அனுமதிக்க வரைபு பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன். பல முக்கிய மனித உரிமை வழக்குகளில் நீதித்துறை நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து நான் கவலைப்படுகிறேன்.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 பேர் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மீதான குற்றச்சாட்டுகளைத் தொடர முடியாது என்ற சட்டமா அதிபரின் தீர்மானமும் இதில் அடங்கும். பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், 2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் தொடர்ந்து உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்து அழைப்பு விடுக்கின்றனர்.

2011ஆம் ஆண்டில் அரசியல்வாதியைக் கொலை செய்த குற்றத்திற்காக தண்டனை பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியின் அண்மைய பொது மன்னிப்பு சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதி செயன்முறை மீதான நம்பிக்கையை சிதைக்கும் அபாயமும் காணப்படுகின்றது.

காவல்துறை தடுப்புக்காவல் உயிரிழப்புகள் மற்றும் போதைப்பொருள் குற்றச் சாட்டுக்களை எதிர்நோக்கியவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகங்கள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளின் தொடர்ச்சியான சித்திரவதைகள் மற்றும் மோசமான நடத்தைகள் குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

மார்ச் மாதத்தில், புதிய 'தீவிரமயமாக்கல்' விதிமுறைகள் அறிமுகமாகியதோடு, இது தனிநபர்களை இரண்டு வருடங்கள் வரை விசாரணையின்றி தன்னிச்சையாக நிர்வாகக் காவலில் வைக்க அனுமதிக்கிறது.

இந்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்களை பரிசீலித்த உச்ச நீதிமன்றம் அதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறித்து நான் அவதானம் செலுத்தியுள்ளேன். 300ற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் குழுக்கள் மற்றும் தனிநபர்கள் பயங்கரவாத குழுக்களுடன் தொடர்புளை பேணுவதாக அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது அல்லது பட்டியலிட்டுள்ளது. ஜூன் மாதத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்ட 16 கைதிகள் தண்டனைக் காலம் முடிவடையும் தருவாயில் மன்னிக்கப்பட்டனர். சட்டத்தின் கீழ் கைதிகள் தங்கள் வழக்குகளை மீளாய்வு செய்ய விண்ணப்பிக்கக்கூடிய ஒரு ஆலோசனை சபை நிறுவப்பட்டுள்ளது, மேலும் இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வை நான் வலியுறுத்துகிறேன்.

பயங்கரவாத தடை சட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்கான தனது நோக்கத்தை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதோடு இதற்காக அமைச்சரவை துணைக்குழுவை அமைத்துள்ளது. எனினும் மக்களை கைது செய்யவும் தடுத்து வைக்கவும் சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

சட்டத்ரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இப்போது 16 மாதங்களாக குற்றச்சாட்டுக்கள் இன்றியும், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாப் ஜசீம் மே 2020 குற்றச்சாட்டுகள் இன்றி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சட்டத்தை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு நான் வலியுறுத்துகிறேன்.

மேலும் அதன் விரிவான ஆய்வு அல்லது இரத்து செய்ய ஒரு தெளிவான காலக்கெடு அமைக்கப்பட வேண்டும். இழப்பீடுகளுக்கான தேசியக் கொள்கை ஆகஸ்டில் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் இழப்பீடு கொடுப்பனவுகள் மற்றும் நல்லிணக்கத் திட்டங்கள் தொடர்ந்தன. காணாமல் போனோர் அலுவலகம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

கிளிநொச்சியில் ஆறாவது பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டது ஆனால் அது பாதிக்கப்பட்டவர்களிடையே நம்பிக்கையை ஊக்குவிக்க வேண்டும்.

வெளிப்படையான, பாதிக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட மற்றும் பாலின உணர்திறன் அணுகுமுறைகளின் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன், மேலும் இழப்பீட்டு திட்டங்கள் பரந்த உண்மை மற்றும் நீதி நடவடிக்கைகளுடன் இருக்க வேண்டும்.

கடந்த மாதம், தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணி, பரிஸ் கோட்பாடுகளுடன் இணங்குவதைத் தீர்மானிக்க தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட மதிப்பீட்டை ஆரம்பிக்க தீர்மானித்தது ஆணைக்குழுவின் நியமன செயன்முறை மற்றும் அதன் மனித உரிமை ஆணையை நிறைவேற்றுவது ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பின்னணியில், தீர்மானம் 46/1 இன் பொறுப்புக்கூறல் தொடர்பான அம்சங்களைச் செயல்படுத்துவதற்கான எனது அலுவலகத்தின் பணிகள் ஆரம்பமாகியது. ஒரு ஆரம்ப குழுவின் ஆட்சேர்ப்பு நிலுவையில் உள்ளது. ஐநாவினால் ஏற்கனவே 120,000 தனிப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய ஒரு தகவல் மற்றும் ஆதாரக் களஞ்சியத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம், மேலும் இந்த வருடம் முடிந்தவரை தகவல் சேகரிப்பை ஆரம்பிப்போம்.

நிதி ஒதுக்கீட்டு செயல்முறைக்குத் தேவையான ஒத்துழைப்பை அளிப்பதை உறுதி செய்ய உறுப்பு நாடுகளை நான் கேட்டுக்கொள்கிறேன், இதனால் எனது அலுவலகம் இந்த வேலையை முழுமையாக செயற்படுத்த முடியும்.

பேரவையின் உறுப்பினர்கள் இலங்கையின் முன்னேற்றங்கள் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்தவும், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதில் நம்பகமான முன்னேற்றத்தைத் ஆராயவும் நான் ஊக்குவிக்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் கழிவுகளை ஆற்றில் வீசுவதால் மீனவர்களின் தோழில் பாதிப்பு







(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி ஆற்றில் தோணி மற்றும் படகு மூலம் மீன்பிடித் தொழிலாக கொண்ட மீனவர்கள் அண்மைக்காலமாக தங்களது தொழிலை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை தொடர்ச்சியான நாளாந்தம் அனுபவித்து வருவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஓட்டமாவடி மீனவர்கள் தங்களது ஜீவனோபாயத்திற்காக தோணி மற்றும் படகு மூலம் மீன்பிடிப்பதை தொழிலாக கொண்டுள்ளனர். இவர்கள் மூலம் நேரடியாகவும் மறைமுகமகவும் பல்வேறு குடும்பங்கள் தங்களது ஜீவனோயத்தினை கடத்தி வருகின்றனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு தொடர்ச்சியாக மீன் தொழிலை மேற்கொள்ளாத வகையில் பல்வேறு இடையூறுகளை பொதுமக்கள் வழங்குவதாக மீனவர்கள் கவலை தெரிவித்தார்.

ஓட்டமாவடி மீனவர்கள் மீராவோடை தொடக்கம் ஓட்டமாவடி பாலத்தை தாண்டி தியாவட்டவான் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லும் போது அந்த பகுதியிலுள்ள ஆற்றின் ஓரங்களில் உள்ள பொதுமக்களும் வேறு பிரதேசத்தில் உள்ள மக்களும் கழிவுகளை வீசி வருகின்றனர் இதன் காரணமாக மீனவர்களின் மீன்பிடி தொழிலானது பாரிய இன்னல்களை சந்திக்க நேரிடுகின்றது.

அந்தவகையில் மீராவோடை தொடக்கம் ஓட்டமாவடி பாலத்தை தாண்டி தியாவட்டவான் பகுதி வரைக்கும் ஆற்றங்கரை ஓரத்தில் தங்களுடைய வீட்டு கழிவுகள், குழந்தைகளின் மலசல கழிவுகள் என்பவற்றை கொட்டுகின்றனர். அத்தோடு கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி வியாபாரிகள சிலர்; தங்களுடைய இறைச்சி கழிவுகளையும் மூடைகளில் வீசி விட்டு செல்கின்றனர். இதன் காரணமாக அனைத்து கழிவுகளும் ஆற்றில் சேரும் போது இவை மீனவர்களின் வலைகளில் சிக்கிக் கொள்வதுடன், இதனை மீன்கள் உணவாக உண்ணும் பட்சத்தில் மீன்களில் இனம் அழிவடைந்து காணப்படுகின்றது. குறித்த பகுதியில் மீன்களைவிட பொதுமக்களினால் வீசப்படும் கழிவுகளே அதிகமாக காணப்படுகின்றது.

பொதுமக்கள் தங்களது வீட்டுக்கழிவுகளையும் இறைச்சிக்கடை வியாபாரிகள் சிலர் பேன்னில் கட்டி ஆற்றில் கொட்டுவதுடன், சிலர் தங்களது வீட்டு கழிவு நீரை குழாய் மூலம் ஆற்றில் விடுகின்றனர். இதனால் கழிவு நீரும் ஆற்றில் சேர்கின்றது இதனால் மீன் இனப்பெருக்கம் குறைவாக காணப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்கியா திட்டத்தில் அமையப்பெற்ற கொடுவா மீன் உற்பத்திகள் பொது மக்களின் கழிவுகள் மூலம் முற்றாக பாதிப்படைந்து காணப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். பெரும்பாலும் ஆற்றில் குப்பைகள் கொட்டப்படுவதாகவும், இதனால் ஆறு முற்றாக பாதிக்கப்படுவதாகவும், வலை வீசும் போது வலையில் மீன்கள் வருவதில்லை, பொதுமக்களினால் வீசப்படும் கழிவுகள் தான் அதிகம் வருகின்றது என்று மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஓட்டமாவடி ஆற்றில் அதிகம் குப்பைகள் கொட்டுகின்றனர்; அத்தோடு பொது மக்கள் தங்களது வீட்டு குப்பைகளை சேகரித்து பாலத்தின் ஊடாகவும்; கொட்டுகின்றனர் இதனால் காலப்போக்கில் ஆற்றில் மீன் பிடிக்க முடியாத நிலை போய் எங்களது வலைகளில் குப்பைகளை சேகரிப்பதுடன் ஆறும் துர் நாற்றம் வீசும் நிலைமை உருவாகும். இது தொடர்பில் ஓட்டமாவடி பிரதேச சபையிடம் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாங்கள் ஒவ்வொரு தடவையும் குறித்த விடயம் தொடர்பில் பல்வேறுபட்ட அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் போன்றோருக்கு தெளிவுபடுத்தியும் யாரும் கரிசனை கொள்ளவில்லை. மீன்பிடித் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும் அரச அதிகாரிகள் கவனம் செலுத்துவது குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே ஓட்டமாவடி ஆற்றில் அதிகம் கழிவுகளை வீசுவதாலும், கழிவு நீரினையும் திறந்து விடுவதாலும் ஆற்றின் தன்மை அழிவடைந்து, மீனினம் முற்றாக இல்லாமல் போகும் நிலைமை உருவாகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் ஓட்டமாவடி ஆறு குப்பைகள் மற்றும் இறைச்சி கழிவுகளால் நிறைந்த கழிவு கூடமாக மாற்றம் பெரும். இதனால் மீன் தொழிலாளிகள் தங்களது வாழ்வாதாரத்தினை இழந்து நிர்க்கதியாகும் நிலைமை உருவாகும்.

குறித்த விடயம் தொடர்பில் மீன்பிடித் திணைக்களத்தின் பரிசோதகரிடம் முறைபாடு செய்துள்ளோம். இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். ஆனால் இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதற்கு உரிய தீர்வினை பெற்றுத்தரவேண்டும்.

எனவே ஆற்றில் போடப்படும் வீட்டு கழிவுகள், குழந்தைகளின் மலசல கழிவுகள், கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி வியாபாரிகள் தங்களுடைய கழிவுகளை போடுவதனால் வலைகள் சேதமடைந்த நிலையிலும், மீனவர்களின் தொழில்களை தொடர்ந்தும் பாதிப்படைந்து காணப்படும் நிலையில், கழிவுகளை ஆற்றில் போடாது தடுப்பதுடன் மீனவர்களின் தொழிலை திறம்பட மேற்கொள்ளும் வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஊடகவியலாளர் பிரகாஷ் ஞானப்பிரகாசத்திற்கு இரா.சாணக்கியன் மலரஞ்சலி



கொரோனா நோய்த்தொற்று காரணமாக உயிரிழந்த இளம் ஊடகவியலாளர் பிரகாஷ் ஞானப்பிரகாசத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மலரஞ்சலி செலுத்தினார்.

தென்மராட்சி வெள்ளாம்போக்கட்டியில் உள்ள அவரின் வீட்டிற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் சாவகச்சேரி அமைப்பாளர் சயந்தன் சகிதம் நேற்று மாலை நேரடியகச் சென்றிருந்த சாணக்கியன் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியதுடன் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து ஆறுதலும் கூறினார்.

மாற்றுத்திறனாளியான இளம் ஊடகவியலாளர் பிரகாஸ் தசையழிவு நோய்த்தாக்கத்தினால் சக்கர நாற்காலியோடு முடங்கியிருந்த நிலையிலும் தனது திறமையாலும் எழுத்தாற்றலாலும் எல்லோரது கவனத்தையும் ஈர்த்த ஒருவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## படி ரக வாகனம் - லொறி விபத்து: 28 வயதுடைய இளம் குடும்பஸ்தர் மரணம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

படி ரக வாகனமும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வாழைச்சேனை பகுதியில் இருந்து படி ரக வாகனத்தில் பொருட்களை ஏற்றிக்கொண்டு மாத்தளை நோக்கிச் சென்ற போது கலேவல - மொரகொல்ல பகுதியில் வைத்து இவ் விபத்து நேற்று காலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் படி ரக வாகனத்தை செலுத்திச்சென்ற வாழைச்சேனை - செம்மண்ணோடை வாஹித் வீதியைச் சேர்ந்த மூன்று வயது பெண் பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய புகாரி இர்ஷாத் என்பவர் மரணமடைந்துள்ளார். அத்துடன், படி ரக வாகனத்தில் பயணித்த வாகன உரிமையாளர் ஆபத்தான நிலையில் மொரொகொல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூரில் நாற்பதாயிரம் பேருக்கு கோவிட் தடுப்பூசி



(ஏறாவூர் நாஸர்)

ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இதுவரை சுமார் நாற்பதாயிரம் பேருக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்தியதிகாரி சாபிறா வசிம் தெரிவித்தார்.

அந்த அடிப்படையில் 21 ஆயிரத்து 428 பேருக்கு முதலாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டோசினை 18 ஆயிரத்து 204 பேர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

கொவிட் தடுப்பு ஊசியினைப் பெற்றுக்கொள்வதில் ஏறாவூர்ப் பிரதேச மக்கள் பெரும் ஆர்வத்துடன் செயற்படுவதாக வைத்தியதிகாரி குறிப்பிட்டார்.

## கிழக்கின் சிறகுகள் அமைப்பினரால் மட்டு.தளவாயில் வறிய குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கி வைப்பு



கிழக்கின் சிறகுகள் அமைப்பினரால் மட்டக்களப்பு, தளவாய் கிராமத்தில் உள்ள 20 வறிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

எங்கள் மக்கள் கனடா அமைப்பின் நிதி அனுசரணையில் தலா 1500 ரூபா பெறுமதியான 20 நிவாரணப் பொதிகள் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், சமூக ஆர்வலரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய செ.குமரன் மற்றும் தளவாய் கிராம மீனவர் சங்க தலைவர் சி.சிவராசா ஆகியோர் கலந்துகொண்டு குறித்த நிவாரணப் பொதிகளை உரிய குடும்பங்களுக்கு வழங்கி வைத்தனர்.

இதேவேளை, திருப்பெருந்துறை, புதூர், கல்லடி ஆகிய பகுதிகளில் மேலும் 20 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கும் நிவாரணப்பொதிகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இதில் கிழக்கின் சிறகுகள் அமைப்பின் நிர்வாக உறுப்பினர் ரவி கிருஷ்ணா கலந்துகொண்டு நிவாரண பொதிகளை வழங்கிவைத்தார்.

கோவிட் பரவுகை காரணமாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள இந்நேரத்தில் வறிய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிழக்கின் சிறகுகள் அமைப்பினரால் நிவாரணப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# சகல சோதனைச் சாவடிகளிலும் தடுப்பூசி அட்டை பரிசோதிக்கப்படும்

## த.வினோதன் எச்சரிக்கை

(வாஸ் கூஞ்ஞ)

கொரோனா தொற்று நோயை தடுப்பதற்காக போடப்படும் தடுப்பூசியில் பைசர் ஊசிதான் போடுவோம் என அடம்பிடித்து சிலர் இவ் தடுப்பூசியை போடாதிருப்பதால் இவர்களால் ஏனையோர் இவ் கொரோனா தொற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்படும். புதன் கிழமை (15) முதல் சகல சோதனைச் சாவடிகளிலும் தடுப்பூசி அட்டை அல்லது அதனுடைய போனில் சேமிக்கப்பட்ட நிழற்படம் பரிசோதிக்கப்படும். என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் எச்சரிகை;கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் பொறுப்பின்றிச் சுற்றித்திரியும் 30 வயதுக்கு மேற்பட்ட பைசர்நாடிகளுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோளில்

தாங்கள் போட்டால் பைசர் ஊசிதான் போடுவோம் இல்லையேல் முழு ஊரிலும் உள்ள நோயாளிகளையும், சிரேஷ்ட பிரஜைகளையும் கொரோனாகுண்டு போட்டு சாகடிப்போம் என்று சபதம் பூண்டு சுற்றித்திரிபவர்களுக்கு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தொடர்ந்து விடுத்துள்ள எச்சரிக்கையில் உங்களுக்கான சினோபாம் தடுப்பூசி போடுவதற்கான இறுதி சந்தர்ப்பமாக திங்கள் கிழமை (13) புதுக்குடியிருப்பு முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் போடப்படும் நிலையில் மற்றும் செவ்வாய் கிழமை (14) கட்டையடம்பன் மகா வித்தியாலயத்தில் இவ் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

எதிர்வரும் புதன் கிழமை (15) முதல் சகல சோதனைச் சாவடிகளிலும் தடுப்பூசி அட்டை அல்லது அதனுடைய போனில் சேமிக்கப்பட்ட நிழற்படம் பரிசோதிக்கப்படும்.

தடுப்பூசி பெறாதவர்களுக்கு அந்த இடத்திலேயே ஆன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளபடும். கொரோனா தொற்று உடையவர்கள் ஆண்கள் எனின் வவுனியா தேக்கவத்தை இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கும்

பெண்கள் எனின் தாராபுரம் துருக்கி சிட்டி இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்படுவர். தடுப்பூசி பெறாதவர்கள் எந்த காரணத்துக்காகவும் வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

திணைக்களங்கள் நிறுவனத்தலைவர்கள் தடுப்பூசி பெறாத உத்தியோகத்தர்களுக்கு சுழற்சி முறை விடுமுறையோ விஷேட விடுமுறை என்பவற்றை வழங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்டுகின்றார்கள்.

அத்துடன் ஜனாதிபதியின் ஆலோசனையை மீறி தடுப்பூசி பெறாமல் இருப்பவர்களுக்கு அரசின் விஷேட சலுகைகளை அனுபவிக்க எந்தவிதமான உரிமையும் அருகதையும் இல்லை என்பதை திணைக்களா. நிறுவனத்தலைவர்கள் நன்கு அறிவார்கள் என்பது எமது நம்பிக்கையாகும் என இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மாவடிப்பள்ளிக்குள் புகுந்த யானையின் அட்டகாசம் ; பல மதில்கள் சேதம்



(நூருல் ஹுதா உமர் , ஐ.எல்.எம். நாஸிம்)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, மாவடிப்பள்ளி வீட்டு குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர். காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி மக்கள் குடியிருப்பு பிரதேசத்திலுள் இன்று அதிகாலை யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு மதில்கள் மற்றும் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தினால் வாழை,தென்னை முதலான பயிர்களை அதிகமாக சேதமாக்கியுள்ளதுடன் வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதிகமாக உயிர் தப்பியுள்ளனர்.மேலும் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த பகுதி கிராமங்களுக்குள் மாவடிப்பள்ளி கிரமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இக்காட்டு யானைகள் ஊருக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக ஊர்ப் பகுதியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சில யானை தடுப்பு மின்சார வேலிகள் செயலிழந்துள்ளதுடன் ஊடுருவியுள்ள காட்டு யானைகள் கூட்டம் வீட்டு மதிலினை உடைத்து சேதம் விளைவித்ததோடு பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் துவம்சம் செய்து சென்றுள்ளன. காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் அறிவித்துள்ளதாக தெரிவித்தனர். .

## மன்னாரில் 1966 ஆக உயர்ந்தது கொரோனா தொற்று

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் 1966 ஆக உயர்ந்துள்ளதுடன் இறப்பும் 23 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மன்னாரின் கொரோனா நிலவரம் தொடர்பாக நாளாந்தம் வெளியிடும் தனது அறிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். 28674 பரிசோதனைகளில் 1966 கொவிட் தொற்றாளார்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

12ந் திகதி (12.09.2021) ஒருவர் கொவிட் தொற்றால் உயிர் இழந்ததைத் தொடர்ந்து தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் இதன் இறப்பு 23 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் இந்நாளில் (12) 6 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் 5 நபர்களும், விடத்தல்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவருமே இவ் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்றையத் தினம் (12) 58 பி.சீ.ஆர். எடுக்கப்பட்டுள்ளதுடன் இவ் மாதம் மொத்தமாக 914 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை உடன் அமுல்படுத்துக

### கிழக்கு ஆளுநருக்கு இம்ரான் எம்.பி கடிதம்

ஹஸ்பர் ஏ ஹலீம்



கிழக்கு மாகாண ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் கடந்த 2 வருடங்களாக அமுல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த இடமாற்றத்தை உடன் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆளுநருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. -

கிழக்கு மாகாணத்தில் விண்ணப்பம் கோரப்பட்ட இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இதுவரை இடம்பெறவில்லை. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை தங்களது மேலான கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் முறையாக ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வந்த போதிலும் ஆசிரியர் இடமாற்றம் கடந்த 2 வருடங்களாக இடம்பெறவில்லை என ஆசிரியர் சமுகம் கவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டு 2021.04.19ஆம் திகதி முதல் அது நடைமுறைக்கு வரும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மே மாதம் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஜூன் மாதம் அமுலுக்கு வரும் என சொல்லப்பட்டுள்ளது. எனினும், இந்த இடமாற்றம் இதுவரை அமுல் படுத்தப்படவில்லை.

இதனால் பல ஆசிரியர்கள் நீண்ட காலமாக கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். எதிர்பார்த்திருந்த இடமாற்றம் இதுவரை கிடைக்காததால் அவர்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். தங்களது நிர்வாக காலத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தில் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறுவது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

எனவே, இதுவிடயத்தைக் கவனத்தில் எடுத்து இவ்வாண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை உடன் அமுலுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.



## ஆரையம்பதி ஆஸ்பத்திரிக்கு அவுஸ்திரேலியா உயிர் காக்கும் கருவி அன்பளிப்பு

வி.ரி.சகாதேவராஜா

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலியதன்னார்வதொண்டுநிறுவனமொன்று 22 லட்சம் ருபா பெறுமதியான உயிர் காக்கும் கருவி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மீள்சக்தி வழங்கக்கூடிய இலகுவாக எடுத்துச்செல்லக்கூடியவாறு வடிவமைக்கப்பட்ட இவ் உயிர்காக்கும்கருவியை( recharging portable ventilator ) அவுஸ்திரேலியன் மருத்துவ உதவி மன்றம்( AUSTRALIAN MEDICAL AID FOUNDATION) அன்பளிப்பாக வழங்கியது.

இவ் வைபவம் ,நேற்று ஆரையம்பதி வைத்தியசாலையில் நடைபெற்றது.

வைத்தியசாலைபொறுப்பதிகாரியும், மாவட்டவைத்திய அதிகாரியுமான வைத்தியகலாநிதி டாக்டர் திருநாவுக்கரசு கௌரிசங்கரன் அக்கருவியை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டார். கூடவே வைத்தியஅதிகாரி டாக்டர் அழகையா இளங்குமரனும் வைத்தியசாலை நிருவாகத்தினரும் கலந்துகொண்டனர்.

கொழும்பிலிருந்து இக்கருவியைக் கொணர்ந்த சுகாதார தொழினுட்ப குழுவினர், இதனை செய்முறைவிளக்கத்தையும் அளித்து மாவட்டவைத்தியஅதிகாரியிடம் கையளித்தனர்.

மிக அவசரமாக செயற்கைச்சுவாசம் தேவைப்படும் நோயாளியை நோயாளர் காவு வண்டியில் கொண்டு செல்வதற்கு மிகவும் பொருத்தமான ஒருகருவி இது.

நீண்டநாள் தேவையாகவிருந்துவந்த இக்கருவியை தமது வைத்தியசாலைக்கு வழங்கி உதவுமாறு மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் திருநாவுக்கரசு கௌரிசங்கரன் குறித்த அமைப்பிடம் கோரிக்கை விடுத்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பழிவாங்கும் நோக்கில் ஹெரோயின் போதைப் பொருளை நபர் ஒருவருக்கு வழங்கிய பிரதான சந்தேகநபர் பெண் கைது

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை சிறைச்சாலையில் கடமையாற்றி வரும் ஜெயிலரை பழிவாங்கும் நோக்கில் ஹெரோயின் போதைப்பொருளை நபர் ஒருவருக்கு வழங்கிய பிரதான சந்தேகநபரான பெண்ணொருவரை கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் திருகோணமலை-மட்கோ மஹமாயபுர பகுதியைச் சேர்ந்த பீ.எச். இனோகா நில்மினி (43வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது 2021 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 19ஆம் திகதி மட்கோ பகுதியிலுள்ள வீட்டிலிருந்து சிறைச்சாலைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோது இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து குறித்த ஜெயிலர் மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் குறித்த ஜெயிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த ஜெயிலர் பயணித்த மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்த குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில்

இவர் வழங்கி தகவல்களுக்கு அமைய குறித்த மோட்டார் சைக்கிளில் போதைப்பொருளை வைக்குமாறு கூறிய பெண்ணொருவர் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து குறித்த மோட்டார் சைக்கிளில் போதைப் பொருளை வைப்பதற்கு சதித்திட்டம் தீட்டிய பெண்ணொருவரை நேற்றிரவு (12) கைது செய்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணை இன்றையதினம் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பாக குறித்த பெண்ணின் மகன் (மலிந்த பின்சர) திருகோணமலை சிறைச்சாலையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறியோருக்கு மட்டக்களப்பில் அன்டிஜன் பரிசோதனை

(ரீ.எல்.ஜவ்பர்கான், மட்டக்களப்பு நிருபர்)



தற்போது அமுலிலுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடியோர் மட்டக்களப்பு நகரில் சுற்றிவளைக்கப்பட்டு அன்டிஜன் பரிசோதனை மேறகொள்ளப்பட்டதாக கோட்டடைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்

நேற்று மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் தலைமையக பொலிசாரின் ஒத்துழைப்புடன் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடியோர் பிடிக்கப்பட்டு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு பார் வீதி உடபட பல இடங்களில் இந்நடவடிக்கை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

## டெங்கு பரவலை கட்டுப்படுத்த வீடு வீடாக சென்று பரிசோதனை

நாட்டில் பருவபெயர்ச்சி மழை பெய்து வந்த நிலையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் வகையில் வீடு வீடான பரிசோதனை நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து காணப்படும் நிலையிலும், தற்போது டெங்கு நோய் தாக்கமும் ஏற்பட்டுள்ள நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வீடு வீடடாக சென்று பரிசோதனை மேற்கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றது. இதன் போது வீடு வீடாக சென்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், வளாகத்தில் தேங்கிக் காணப்படும் கழிவு குப்பைகள் என்பன ஓட்டமாவடி பிரதேச சபையின் வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளதுடன், பொது மக்களுக்கு டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாகவும் ஒலிபெருக்கி மூலம் தெளிவூட்டப்பட்டது.வீடு வீடாக சென்று பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேசசபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கடவுளிடத்தே முரண்பாடுகள் ஏற்படும்போது கட்சிகளிடத்தே இல்லாமல் போகுமா?

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

(துறையூர் சஞ்சயன்)

முரண்பாடுகள், ஒத்த கருத்துகள், கருத்தொற்றுமைகள் மனிதர்களுக்கு மட்டுமல்ல கடவுள்களிடமும் இருக்கிறது. கடவுளிடத்தே முரண்பாடுகள் ஏற்படும்போது கட்சிகளிடையே இல்லாமல் போகுமா என, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத்தமிழரசு கட்சி ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் வெவ்வேறு விதமாக கடிதங்களை அனுப்பியது கருத்தொற்றுமையில்லை என்பதை வெளிக்காட்டுகிறதே என வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

கடவுளர்களிடையே கருத்தொற்றுமையோ செயல் ஒற்றுமையோ இருக்கவில்லை.முரண்பாடான முடிவுகள் வெளிப்பட்டன.இது கடவுளுக்கே ஒற்றுமை இல்லை எனில் எப்படி மனிதர்களுக்கு ஒற்றுமை வரும் என்பதை சிந்தியுங்கள்.


தமிழ்தேசியகூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 2001, டிசம்பர் 09 ம் திகதி இடம்பெற்ற முதலாவது தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில், வடக்கு கிழக்கு மகாணத்தில் போட்டியிட்டு 18, ஆசனங்களை பெற்றது.

2004 ஏப்ரல் 8, இல் இடம்பெற்ற தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போட்டியிடவில்லை. ஆனந்தசங்கரி தமது கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி அதை தர மறுத்ததால் தேர்தலில், இலங்கைத் தமிழரசு கட்சியின் வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்டு 22, ஆசனங்களை பெற்றோம்.

கூட்டமைப்பில் இருந்து முதலாவதாக பிரிந்து சென்ற கட்சி தமிழர் விடுதலை கூட்டணி அதனை பிரித்து சென்ற வரலாறு ஆனந்தசங்கரி ஐயாவையே சாரும். அவர் முரண்பட்டு உதயசூரியனுடன் சென்றாலும் கூட்டமைப்பு தளர்வு அடையவில்லை, தொடர்ந்து பயணித்தது.

2009 மே 18, முள்ளிவாய்க்கால் போர் மௌனத்திற்கு பின்னரே 2010 ஏப்ரல் 8 ஆம் திகதி தேர்தலுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரிந்து சென்றார். 2011, இல் புளொட் கட்சி சித்தார்த்தன் தலைமையில் கூட்டமைப்பு உள்வாங்கப்பட்டது.

2013, ல் மீண்டும் ஆனந்த சங்கரி



தமிழர் விடுதலை கூட்டணி வட மாகாணசபை தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டு தேர்தலில் ஆனந்த சங்கரி ஐயா வெற்றி பெறாமையால் பின்னர் ஒதுங்கிவிட்டார்.

2020 ஆகஸ்ட் 5 ஆம் திகதி தேர்தலுக்கு முன்னதாக ஈ.பிஆ.ர்.எல். எப்சுரேஷ் பிரமச்சந்திரன் உள்ளிட்ட கட்சி தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி வேறு ஒரு அணியாக வடமாகாண சபை முதலமைச்சராக இருந்த சி.வி.விக்கினேஷ்வரன், ʹரீகாந்தா, சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் என பலரும் கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்தனி கட்சிகளை அமைத்து செயற்பட்டனர்.

தற்போது மீண்டும் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமென்ற கருத்தும் அவர்களிடம் உள்ளது. அது நல்ல விடயம். அது ஒரு புறம் இருக்க தற்போது ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு கூட்டமைப்புக்குள்ளும், இலங்கைத் தமிழரசு கட்சிக்குள்ளும் ஒற்றுமையாக ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் கடிதம் அனுப்பவில்லை. இதனால் கூட்டமைப்பு பிளவு, பிரிவு ஏற்பட்டதாக ஊடகங்களில் பல அரசியல் தலைவர்களும் ஆய்வாளர்களும் கருத்துக்களை தெரிவிப்பதை காண முடிகிறது.

அவ்வாறு எந்த சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு பிரிந்து செல்லவில்லை. ஆனால் கருத்தொற்றுமை இல்லை என்பதால் வெவ்வேறாக கடிதங்கள் அனுப்பியதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். சம்பந்தன் ஐயா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், மாவை சேனாதிராசா ஆகிய தலைவர்கள் தாம் எக்காரணம் கொண்டும் தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற வில்லை என்பதையே கூறியுள்ளனர்.

கருத்து முரண்பாடு ஜனநாயக கட்சிகளிடையே வருவது வழமை. அதை சீர்செய்து தமிழ் தேசிய அரசியல் பணி தொடரும் எனவும் மேலும் கூறினார்.

# பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு சுவ தாரணி ஆயுள்வேத மருந்து வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் ஆயுள்வேத வைத்தியசாலைகள் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலை திட்டத்தின் ஒரு கட்டமாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையினால் பாரம்பரிய ஆயுள்வேத முறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் ʹசுவ தாரணிʹ ஆயுர்வேத பானம் இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இணைப்பாளரும், சிறுவர் மற்றும் இளைஞர்களை பாதுகாக்கும் சமூக ஸ்தாபனத்தின் தலைவருமான பி(ஆ). சர்மில் ஜஹான் தலைமையில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாமில் நடைபெற்றது.

நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஏ.நபீல் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஒரு தொகுதி மருந்துகளை விசேட அதிரடிப்படை பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம்.பி.பி.எம்.டயஸிடம் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட வைத்தியசாலையின் டாக்டர். ஏ.சி.டில்சாத், மருதமுனை ஆயள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்களான டாக்டர் எம்.என்.எம்.முஸ்தாக், டாக்டர் திருமதி எஸ்.எச்.எப்.றிஸ்வானா ஆகியோரும் கலந்துகொண்டனர். ஆயள்வேத பானத்தை அருந்தும் முறைகள் பற்றியும் வைத்திய அதிகாரிகளால் விசேட அதிரடிப்படையினருக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

# தமிழர்களின் மனித உரிமை தொடர்பான பாதுகாப்பு சர்வதேசத்தினால் வலுவுள்ளதாக மாறும்

(படுவான்பாலகன்)

தமிழர்களின் மனித உரிமை தொடர்பான பாதுகாப்பு சர்வதேசத்தினால் வலுவுள்ளதாக மாறும் என நினைக்கிறேன் என மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் குறிப்பிட்டார்.

மேலும் இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் தொடர்பான அமைப்பினால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் தமிழ் மக்களினதும் மனித உரிமைகள் எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே பாதிக்கப்



பட்டவர்களும், ஆர்வலர்களும் இது தொடர்பாக முறையிட்டுள்ளனர். இந் நடவடிக்கைகள் ஊடாக தமிழ்மக்கள் பாதிக்கப்படுவதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுக்குழு சிறப்பான முறையில் செயற்பட்டதன் காரணமாகவே புலம் பெயர்ந்த நாடுகளின் பல நாடுகள் தமிழர்களுக்கு புகலிடம் வழங்கியதை மறக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்றாகும்.

குறிப்பிட்ட காலத்திற்கு முன் ஓரிருவர் இது தொடர்பாக செயற்பட்டாலும் புலம் பெயர் நாடுகள் குறுகிய வட்டத்திற்குள் சிந்திக்கவில்லை. புகலிடம் வழங்கியதிலேயே ஜனநாயகம், பன்மைத்துவம், பல மொழிகள், பல இனங்கள், பலநாடுகள் போன்றவற்றிற்கும் புகலிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு விரலை நீட்டினாலும் அச் செயற்பாடு என்பது உண்மைக்கு மாறாக இருக்காது.

ஆயுதப்போராட்டம் நடைபெற்ற பல நாடுகளிலும் பல தசாப்தங்களுக்கு மேலாக மனித உரிமைகள், செயற்பாடுகள் சர்வதேச மனித உரிமை அமைப்பினால் முடக்கி விடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலத்தில் தமிழர்களின் மனித உரிமை தொடர்பான செயற்பாடுகள் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையை வலுப்பெற வைக்கும் என நம்புகின்றேன் என்றார்.

# சுவிஸ் உதயத்தின் ஏற்பாட்டில் திருமதி செல்வி மனோகர் அஞ்சலி நிகழ்வும் பொதுச்சபைக் கூட்டமும்



(எஸ்.சபேசன்)

சுவிஸ் உதயம் கிழக்கின் உதவிச் செயலாளர் திருமதி செல்விமனோகர் கடந்த 18 ஆம் திகதி மரணமடைந்தார் இவரை நினைவு கூறும் வகையில் சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் டி.எல். சுதர்சன் அவர்களது தலைமையில் 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை நினைவு கூறல் நிகழ்வும் அத்துடன் சுவிஸ் உதயத்தின் 2021 ஆண்டிற்கான பொதுச்சபை கூட்டமும் சுவிஸ் நாட்டில் நடைபெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பானது ஏழை மக்களுக்காக 2004 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இலங்கையில் பல்வேறு சேவையினை முன்னெடுத்து வருகின்றது. இவ் அமைப்பில்; ஒரு உறுப்பினராக இணைந்து சேவையாற்றியவரே செல்வி மனோகர் ஆவார்

இவரது சேவைகளையும் இவரைப்பற்றியும் நினைவு கூறும் நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் தலைவர் டி.எல்.சுதர்சன், செயலாளர் அம்பலவானர் ராஜன், பொருளாளர் க.துரைநாயகம் ஆகியோர் அஞ்சலி உரையினை நிகழ்த்தியதுடன் அங்கு வருகை தந்த அமைப்பின் உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை இவ் ஆண்டுக்கான பொதுச்சபைக் கூட்டம் இடம்பெற்றதுடன் இதில் இவ்வருடத்திற்கான வரவு செலவு அறிக்கை பொருளாளர் க.துரைநாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னார் எதிர் வரும் ஆண்டில் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் பொதுச்சபையில் ஆராயப்பட்டதுடன் செயலாளர் அம்பலவானர் ராஜன் அவர்களால் நன்றியுரையும் நிகழ்த்தப்பட்டது.

# மக்களுக்கு பாதகம் ஏற்படுத்தக்கூடிய பல விடயங்கள் நல்லாட்சியில் செய்யப்பட்டுள்ளது; ரமேஷ்வரன் எம்.பி தேரிவிப்பு

(க.கிஷாந்தன்)

நல்லாட்சி அரசாங்கத்தின் போதே மலையகத்தில் 52 ஆயிரம் பேருக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. எமது மக்களுக்கு பாதகம் ஏற்படுத்தக்கூடிய பல விடயங்கள் அந்த ஆட்சியில் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

நேற்று கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்



தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான ஏ.பி.சக்திவேல், கணபதி கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ʹʹநல்லாட்சியின்போது 52 ஆயிரம் பேருக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது என ஊடகவியலாளர்களாகிய நீங்களே குறிப்பிடுகின்றீர்கள். அந்த அரசில் மலையக அமைச்சர்களும் இருந்தனர். அப்போது ஏன் இது பற்றி கேள்வி எழுப்படவில்லை. இந்த விடயம் மட்டுமல்ல மலையக மக்களுக்கு பாதகம் ஏற்படக்கூடிய பல விடயங்கள் நல்லாட்சியின்போது செய்யப்பட்டுள்ளன. காணிகள் பறிபோயுள்ளன. அதேநிலை ஏற்பட்டிருந்தால் இ.தொ.கா மௌனம், நடவடிக்கை எடுக்கவில்லை என விமர்சனங்கள் முன்வைக்கப்படும்.

அதேவேளை, மலையக மக்கள் மீது அதிகபொறுப்பும், பற்றும் காங்கிரசுக்கு உள்ளது. மக்களுக்கு பிரச்சினை என்றால் களத்தில் இறங்கி செயற்படுவோம். உதவி செய்துவிட்டு அதனை ஊடகங்களில் பிரச்சாரம் செய்யமாட்டோம். அதேபோல விமர்சனங்களை முன்வைத்து அன்று முதல் இன்றுவரை நாம் அரசியல் நடத்தியதும் கிடையாது. ஆனால் சிலருக்கு காங்கிரஸை விமர்சிக்காவிட்டால் அரசியல் நடத்தமுடியாது.

கடந்த ஒரு வருடத்துக்குள் %00 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படாத வீடுகளுக்கு அவற்றை செய்துகொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

காணி பறிக்கப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர். ஜீவன் மௌனம் எனவும் கூறுகின்றனர். அவர் வெளிநாடு சென்றுள்ளார். நாடு திரும்பியதும் பதில் வழங்குவார். பால் பண்ணை அமைக்கும் விடயம் பற்றி அமைச்சர்களான மஹிந்தனாந்த, ரமேஷ் பத்திரன ஆகியோரிடம் கலந்துரையாடியுள்ளோம். தொழில் பேட்டைகள் வரும்போது எமது மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். -என்றார்.




# திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் போதிகள் வழங்கி வைப்பு



(திருக்கோவில் நிருபர்)

கொவிட் 19 காரணமாக நாட்டில் தொடர்ந்தும் அமுலில் இருந்து வரும் அரசின் பயணத்தடை காரணமாக அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்வாதாரத்தை இழந்த தினக்கூலிக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் உலர் உணவுப் பொதிகள் காயத்திரி குறுப் எனும் தொண்டு அமைப்பின் நிதி அனுசரனையுடன் இன்று திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தில் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் மேற்படி அமைப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக சுமார் 100 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இவ் உலர் உணவுப் பொதிகளை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் கலாநிதி செல்வி அனுஷியா சேனாதிராசா வேலாயுதம் வாமதேவன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவையாளர் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அமைப்பின் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.




# மேயர் பிரகாஸின் ஏற்பாட்டில் மாத்தளை சென்.தோமஸில் தடுப்பூசி





(காரைதீவு நிருபர்)

மாத்தளை மாநகரசபையின் ஏற்பாட்டில் மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினரால் மாநகரிலுள்ள 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மாத்தளை நகரிலுள்ள சென்.தோமஸ் கல்லூரியில் இத்தடுப்பூசி ஏற்றப்பட்டது.

60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏலவே ஏற்றப்பட்டு நிறைவடைந்த கையோடு மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் தலைமையில் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர். அனுஷ வெலகெதர தலைமையிலான குழுவினர் இச்சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அத்தருணம் மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் உறுப்பினர் த.மோகன் உள்ளிட்டோரும் தொடர்ச்சியாக தடுப்பூசி போடும் இச் செயற்றிட்டத்தை ஊக்குவித்து வருகின்றனர்.

# தமிழர்களின் கலை கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணப்பிள்ளை

(துறையூர் சஞ்சயன்)

பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட தமிழர்களின் கலை கலாசாரம் சிதைவடையாது பாதுகாக்கப்பட வேண்டும். ஆனாலும் இன்றைய கொரோனா தொற்றுப் பரவல் சூழ்நிலையில் தமிழர்களுக்கே உரித்தான கலை கலாசார பாரம்பரியத்தினை பின்பற்றுவதிலும் பேணுவதிலும் தவறியிருக்கிறோம் என மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஞா. கிருஷ்ணப்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

எமது முன்னோர்களினால் காப்பாற்றப்பட்டு வந்த எமக்கே உரித்தான கலை கலாசாரங்களை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல வேண்டியது இளம் சமூகத்தின் பொறுப்பாகும். கலை கலாசாரம் பற்றிய தெளிவான புரிதலின்மையும் அந்நிய கலாசார செல்வாக்குமே இன்றைய இளம் தலைமுறையினர் மேலைத்தேய மோகத்தில் நாட்டமுடையவர்களாக இருப்பதற்கு பின்னணியாகிறது.

கல்வியுடன் கலை கலாசாரத்தினை இளந்தலைமுறையினர் மத்தியில் வளர்ப்பது தமிழ்ச் சமூகத்தின் இன்றியமையாத பொறுப்பாகும். எமது இனத்தின் கலை கலாசார சிறப்புகளை அறிந்து வைத்திருந்தால், அவை அழியாமல் பேணுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

உண்மையில் ஒரு சாபப்பட்ட இனமாக கிழக்கு மண்ணில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கலை கலாசாரத்துடன் இணைந்து கல்வியினை வளர்ப்பதற்கு மத தலங்கள், சமூக மட்டக்குழுக்கள் இவை தொடர்பாக விழிப்புடனும் ஆர்வத்துடனும் இருக்க வேண்டிய தேவையுள்ளது.

கல்வி, சுகாதாரம், அரசியல் கலாசாரம், பண்பாடு, உரிமை, அபிவிருத்தி என அனைத்து துறைகளிலும் தமிழர்களை வளர்ச்சிபெறச் செய்து தனித்துவத்துடன் தன்மானத் தமிழர்களாக வாழ வைக்க உயரிய முயற்சிகளையும் தொலைநோக்கு பயணங்களையும் மேற்



கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

ஆகையால் தமிழர்களின் உரிமை அடையாள தொல்லியல் விடயங்களை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாக அரசாங்கத்திடம் மாத்திரமல்ல சர்வதேசத்திடமும் போராடி உரிமையைப் பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மை இனத்தவர்களோடு சேர்ந்து வாழ்வதற்கு விரும்பினாலும் தமிழர்கள் தமிழர்களாக சுய உரிமையோடு வாழ்வதற்கு மாத்திரமே விரும்புகிறார்கள்.

ஆகவே, ஒரு தமிழன் இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியம் நிலைத்திருக்கும். அதை இல்லாதொழிப்பதற்கு எவராலும் முடியாது.

# வீதியில் அலைந்த 17 பேரில் மூவருக்கு கொரோனா

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் நேற்று வீதியில் திரிந்த மேற்கொண்ட 17 பேருக்கான அண்டிஜென் பரிசோதனையின் பெறுபேறுகள் 03 நபர்களுக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 20 மாதிரிகளும் எடுக்கப்பட்டன என்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ சுகுணன் வேண்டுகோளுக்கிணங்க சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வஸீர் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர், பாதுகாப்பு படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு அண்டிஜென் பரிசோதனையின் போதே இந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே மக்கள் வெளியில் அத்தியவசிய தேவை தவிர வர வேண்டாம் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா வசீர் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

# கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு

(எம்.ஏ.றமீஸ்)



முப்பது வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட சினோபாம் மற்றும் அஸ்ட்ரா செனக்கா போன்ற தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தலைமையில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவின் கீழுள்ள ஒலுவில், பாலமுனை, தீகவாபி மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்ட ஏழு மத்திய நிலையங்களில் இவ்வாறு தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நோய் நிலைமை காரணமாக நடமாட முடியாத வயோதிபர்கள், விஷேட தேவையுடையோர் போன்றோருக்காக நடமாடும் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டமும் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்நடமாடும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட அறுபது வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றோர் நன்மையடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தின் உதவியுடன் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் 100 நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மூதூர் நகரம் அபிவிருத்தி ஆரம்பித்து வைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

ஜனாதிபதிமின் வழிகாட்டலுக்கமைய நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்திற்கமைய மூதூர் நகர அபிவிருத்தி வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரள அவர்களால் 3 சீடி சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகையை திறந்து ஆரம்பித்து வைத்தார்.

இத் திட்டத்தின் மூலம் சுமார் 18.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மூதூர் நகரம் அழகுபடுத்தப்பட இருக்கின்றது.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, நகர அபிவிருத்தி அதிகார சபை கிழக்கு மாகாணப் பணிப்பாளர், திரு. ஜகத் லியனகே, மற்றும் மூதூர் பிரதேச செயலாளர். எம்.ஏ.எம், முபாரக், மூதூர் தொகுதி அமைப்பாளர்கள், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம் ஏ.அறூஸ், உறுப்பினர்கள் சபை செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்கள் அரச அதிகாரிகள் , மதத் தலைவர்கள், , பொது மக்கள் கட்சித் தொண்டர்கள், என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மட்டு.பிள்ளையாரடி பாதையில் விலங்குக் கழிவுகள் பொதுமக்கள் அசௌகரியம்

(துறையூர் சஞ்சயன்)



மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிள்ளையாரடிப் பிரதேசத்தில் குப்பைகூழ விலங்குக்கழிவுகள் கொட்டப்படுவதாக பிரதேசவாழ் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் பிரதேசத்துக் குட்பட்ட பிள்ளையாரடிப் பிரதான பாதையில், கழிவுகள் நாளாந்தம் கொட்டப்படுவதனால் மட்டு. வாவி மீன்பிடி நடவடிக்கைகள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்காக குறித்த பிரதான பாதையை பயன்படுத்துவோரும் பிரதேசத்தைக் கடந்து கொழும்பு, திருகோணமலை பயணிப்போரும் துர்நாற்றத்தை சுவாசிப்பதனால் குமட்டல் வாந்தியுடனான பல்வேறு அசௌகரிய நிலைக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டல் தாவரங்கள் நிறைந்து காணப்படும் குறித்த பிரதான பாதை வழியே பிளாஸ்டிக்குடன் கூடிய தேவையற்ற பொருட்களை கொட்ட வேண்டாம் என்று அறிவித்தல் பலகை இடப்பட்டும் தொடர்ச்சியாக குப்பைகள் கொட்டப்படுவதனால் பிரதான பாதை துப்பரவற்று அருவருக்கத்தக்க நிலையிலுள்ளதாக பயணிகள் கவலையடைகின்றனர்.

கண்டல் தாவரங்களை வாழிடமாகக் கொண்ட அரிய வகை உயிரினங்கள் மற்றும் கால்நடைகள், பறவையினங்கள் போன்றவை இக்கழிவுகளை உட்கொள்வதனால் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மட்டு வாவியில் மீன்பிடி நடவடிக்கை மற்றும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் உட்பட பிரதான பாதையில் பயணிப்போர் சுவாச நோய்களுடன் தொடர்புடைய பல்வேறு நோய்த் தாக்கத்திற்குட்படுவதனால்

இப்பாதையில் கொட்டப்பட்டுள்ள குப்பைகூழ, பிளாஸ்டிக் கழிவுகளை உடன் அகற்றுவதுடன் மேலதிக நடவடிக்கைகளை பொறுப்புள்ள அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சீன நோபல் பரிசை வென்றார் பேராசிரியர் மலிக் பீரிஸ்




(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

இலங்கையை சேர்ந்த பேராசிரியர் மலிக் பீரிஸ் 'சீன நோபல்' என்று அழைக்கப்படும் 2021 எதிர்கால அறிவியல் பரிசை வென்றுள்ளார்

'சீனநோபல்' என்று அழைக்கப்படும் 2021 வருங்கால அறிவியல் பரிசு பெற்றவர்கள் விபரம் இன்று அறிவிக்கப்பட்டது. க்வோக்-யுங் யுவன் மற்றும் ஜோசப் ஶ்ரீயால் மலிக் பீரிஸ் ஆகியோர் சார்ஸ் வைரஸ் மற்றும் கோவிட் -19 ஐப் படிப்பதில் அதன் தாக்கம் பற்றிய முக்கிய கண்டுபிடிப்புகளுக்காக வாழ்க்கை அறிவியலில் பரிசுகளை வென்றுள்ளனர்.

ஹொங்காங் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் யுவென் க்வோக்-யுங் மற்றும் ஹொங்காங் பல்கலைக்கழகத்தின் பொது சுகாதாரப் பள்ளியின் வைரொலஜி பேராசிரியர் மலிக் பீரிஸ் ஆகியோர் .வாழ்க்கை அறிவியல் பரிசைப் வென்றுள்ளனர் . அத்துடன் இவர்களுக்கு 1 மில்லியன்

அமெரிக்க டொலர் பணப் பரிசும் சன்மானமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் (SARS-COV-1) 2003 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் கடுமையான சுவாச நோய்க்குறி (SARS) மற்றும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் சங்கிலி என்று இருவரும் கண்டுபிடித்தனர். அவர்கள் மத்திய கிழக்கு சுவாச நோய்க்குறி (MERS) மற்றும் புதிய கொரோனா வைரஸால் ஏற்படும் தொற்று நோயை சமாளிக்க மனிதர்களுக்கு உதவினார்கள். எனவே அவர்களின் பங்களிப்புகளுக்காக அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

மலிக் பீரிஸ் ஒரு இலங்கை நோயியல் நிபுணர் மற்றும் வைரொலஜிஸ்ட் ஆவார். அவர் நீண்ட காலமாக ஹொங்காங்கில் இருந்தார். அவரது ஆராய்ச்சி ஆர்வங்களில் சுற்றுச்சூழல், பரிணாமம், நோய்க்கிருமி உருவாக்கம், விலங்கு-மனித இன்ஃப்ளூயன்ஸா மற்றும் பிற மனித சுவாச வைரஸ் தொற்றுகள், 320க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் போன்றவை உள்ளன.

பேராசிரியர் மலிக் பீரிஸ், பேராசிரியர் யுவன் க்வோக்-யுங் ஆகியோருடன் சேர்ந்து 2021 எதிர்கால அறிவியல் பரிசு மற்றும் குஅகீகு மற்றும் MERS பற்றிய ஆய்வுகளுக்காக 1 மில்லியன் வென்றுள்ளனர்.

சீனாவில் அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக எதிர்கால அறிவியல் பரிசு 2016 இல் தனியார் நிதியால் நிறுவப்பட்டது.

# வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி வைப்பு



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

சமூர்த்தி அருணலு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளும், பயிர் விதைகளும் வழங்கும் நிகழ்வு அன்மையில் மத்திய முகாம் சமுர்த்தி வங்கியில் இடம் பெற்றது.

வங்கி முகாமையாளர் பி.தமிழ்வானன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை பிரதித்தவிசாளர் ஏ.கே. அப்துல் சமட், சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ். நமச்சுவாயம் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளையும் பயிர் விதைகளையும் வழங்கி வைத்தனர்.

மனைப் பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னடுத்து வருகின்ற அதே வேளையில் தேசிய வேலைத்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளும், பயிர் விதைகளும் நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இன்று வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் சமூர்த்தி வலய உதவியாளர் ஏ.எல்.அப்துல் லத்தீப், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.